நாமக்கல் வட்டாரம், லத்துவாடி ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் :- திருமதி. R. பரமேஸ்வரி

ந.க.எண்.அ.ம.

நாள்:

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், நாமக்கல் - நாமக்கல் மாவட்டம் - மோகனூர் வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - லத்துவாடி ஊராட்சி / கிராமம் - சர்வே எண். 291/1A, 381 -ல் அமையும் 0.49 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அளவில் இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1 அரசாணை(நிலை) எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ 4(3), நாள்: 04.05.2017
2 அரசாணை (நிலை) எண். 138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை யு.டி.(4.2), நாள்.04.06.2004
3 மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண் 3620/2021 நாமா. நாள். 28.04.2022
4 தானப்பத்திரம் ஆவண எண்.1520/2022 மற்றும் 1519/2022 நாள். 24.03.2022
5 திருமதி. S. கனகரத்தினம், கதவு எண்: 33A, அருணாசலம் தெரு, சந்தைப்பேட்டை, புதூர், நாமக்கல்.
6 லத்துவாடி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் கடிதம் நாள். 14.06.2022
7 இணை சார்பதிவாளர் நிலை - 2, சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் நாள்:. 21.12.2021

ஆணை,

பார்வை 1 ல் காணும் அரசாணையில் திட்டமில்லாப் பகுதியில் வேளாண்மையிலிருந்து வேளாண்மை அல்லாத பிற பயன்பாடுகளுக்காக நிலங்களை பயன்படுத்திக் கொள்ள இயற்றப்பட்ட விதிகளின்படி, பார்வை 5 இல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் நாமக்கல் வட்டாரம், லத்துவாடி ஊராட்சி/ கிராமம் சர்வே எண். 291/1A, 381 அமையும் 0.49 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ(நாமா) எண். 79/2022 என எண்ணிடப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு லத்துவாடி ஊராட்சி/ கிராமம் சர்வே எண். 291/1A, 381- ல் அமையும் 0.49 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் பார்வை 4இல் காணும் தானப்பத்திரத்தின்படி, நாமக்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் (இணை-2) பதிவு செய்யப்பட்ட ஆவண எண்: 1520/2022 மற்றும் 1519/2022 நாள்: 24.03.2022 படி சாலைக்கு 360.3 சதுரமீட்டர் நிலமும் பொது உபயோகத்திற்கு 9.29 சதுர மீட்டர் நிலமும் லத்துவாடி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பு:

மனையிட ஒப்புதல் கட்டணம் 1983 சதுர மீட்டர் 1 சதுர மீட்டருக்கு ரூ.133

= 1983 X 133 = 2,63,739 X 3% = 7912/- (or) 8,000/-

| | |
|---|---|
| 0217 - Urban Development - 60 Other Urban Development Scheme - 800 Other Receipts - As Receipt under land use conversation - 27 Non Taxation Fees 09 Collection.<br>D.P.C:- 0217-60-800-As-22709 | சலான் மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.<br>சலான் எண் - 20220526004723<br>SBI Bank, Namakkal - Rs. 8,000/-<br>நாள்: 14.06.2022 |

பார்வை 1ல் காணும் அரசாணையில் நிலப்பயன் மாற்றக்கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம், (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47ன் கீழ் மனைப்பிரிவிற்கு சந்தை மதிப்பில் 3% கட்டணத்தினை உரிய கணக்குத்தலைப்பில் செலுத்திய பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 7ல் காணும் கடிதத்தின்படி மேற்படி சர்வே எண்ணில் ஒரு ஏக்கருக்கு வழிகாட்டி மதிப்பு அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்பட்டதில், பார்வை 8இல் காணும் நாமக்கல் சார்பதிவாளர் அலுவலக கடிதத்தில் வத்துவாடி ஊராட்சி/ கிராமம் சர்வே எண். 291/1A, 381- ல் நிலத்தில் 1 ஏக்கருக்கு ரூ.536000/- 1 ஹெக்டருக்கு ரூ.1325000/- வழிகாட்டி மதிப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் வழிகாட்டி மதிப்பில் 3% மதிப்புத்தொகை ரூ.8000/- (ரூபாய் முப்பத்து ஆறாயிரம் மட்டும்) மனைதாரர் சலான் எண். 20220526004723 நாள்: 14.06.2022-ன் படி உரிய அரசுத்தலைப்பில் செலுத்தி, அதற்கான அசல் சலானை இவ்வலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்.

எனவே, வத்துவாடி ஊராட்சி/ கிராமம் சர்வே எண். 291/1A, 381- ல் அமையும் 1983 சதுர மீட்டர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 5ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல், ஆணையில் குறிப்பிட்டுள்ள அனுமதி மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சி அளவில் ஒப்புதல் அளித்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. பொது உபயோகத்திற்காக 10% பரப்பளவு இடம் மற்றும் மனைப்பிரிவு சாலைகளுக்காக தானமாக உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிலத்தில் பிற்காலத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக்கூடாது.
2. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
5. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது, ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
6. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திரப்பதிவு செய்யும்போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரப்பதிவு செய்திட வேண்டும். மேலும், மனைகளை விற்பனை செய்யும் போது மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ஆணையின் நகலோடு ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
7. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.
8. பத்திரப்பதிவுகள் மற்றும் நில உடமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
9. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் வாயிலாக மனை உரிமையாளரால் விற்பனை செய்யப்பட உள்ள மனையின் ஊடே உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார கம்பிகள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.
10. வீட்டுமனைப்பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்ட சாலைகள் தற்போதைய நிலையிலேயே இருக்க வேண்டும். இதில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக்கூடாது.
11. இம்மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து கட்டிட வரைபட அனுமதி பெற வேண்டும்.
12. வீட்டுமனைகளில் இருந்து கழிவுநீர் வெளியேற சொந்த இடத்தில் உறிஞ்சு குழி அமைத்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம் 637 002

ஊராட்சி மன்றத்தலைவர்,
லத்துவாடி ஊராட்சி,
நாமக்கல்.

தலைவர்,
லத்துவாடி ஊராட்சி,
மோகனூர் ஊராட்சி ஒன்றியம்,
மோகனூர் (வ). நாமக்கல் (மா).

பெறுநர்:

திருமதி. S. கனகரத்தினம்,
கதவு எண்: 33A, அருணாசலம் தெரு,
சந்தைப்பேட்டை புதூர்,
நாமக்கல்.

நகல்:

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), நாமக்கல் வட்டாரம்.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
   பரமத்தி ரோடு, நாமக்கல்.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் (இணை -2)
   நாமக்கல் மாவட்டம்.